**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.9/2021**

**வழக்கு சாட்சி: PW.10**

**தேதி: 04.10.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **முத்தையா** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது:** | |

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்சமயம் சிவகங்கை நகர் காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். 01.03.2019ம் தேதி நான் சிவகங்கை நகர் காவல் நிலையத்தில் காவலராக பணியாற்றியபோது மேற்படி காவல் நிலைய குற்ற எண்.101/2019 வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளரிடமிருந்து மேற்படி வழக்கு தொடர்பான ஜெயராமன் என்பவரது மகன் காளிதாஸ் என்பவரது உடலை பிரேத பரிசோதனை செய்வதற்காக வேண்டுகோள் கடிதம் பெற்று மதியம் சுமார் 12.15 மணியளவில் சிவகங்கை அரசு மருத்துவமனை சென்று மருத்துவரிடம் மேற்படி கடிதத்தை கொடுத்து அன்று சுமார் 12.15 மணியளவில் பிரேத பரிசோதனை செய்யவிருந்த மருத்துவரிடம் இறந்து போன காளிதாஸ் என்பவருடைய உடலை அடையாளம் காட்டினேன். மதியம் சுமார் 01.30 மணியளவில் பிரேத பரிசோதனை முடித்து மருத்துவர் காளிதாஸ் பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்தார். அதை நான் அவரின் மனைவி முத்துலெட்சுமியிடம் கொடுத்துவிட்டேன். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு மருத்துவர் இறந்து போனவரது உடலிலிருந்த ஊதா கலர் ஜுன்ஸ் பேண்ட் ஒன்று, வெள்ளை கலர் பனியன் ஒன்று, வெள்ளை ஆரஞ்சு டிசர்ட் ஒன்று ஆகியவற்றை கைப்பற்றி என்னிடம் ஒப்படைத்தார். அதை பெற்று ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். மருத்துவர் என்னிடம் ஒப்படைத்த ஜீன்ஸ் பேண்ட், டிசர்ட் மற்றும் பனியன் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அவற்றில் ஜுன்ஸ் பேண்ட் ஏற்கனவே அ.சா.பொ.1 ஆகவும் டிசர்ட் அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ரத்தம் படிந்த வெள்ளை பனியன் **அ.சா.பொ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை

விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை**

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 9/2021**

**வழக்கு சாட்சி: PW.11**

**தேதி: 04.10.2024**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | **அய்யனார்** | **ஜாதி:** |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்சமயம் இளையான்குடி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 28.02.2019ம் தேதி சிவகங்கை நகர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக நான் பணியாற்றிய போது மேற்படி காவல் நிலைய குற்ற எண்.101/2019 வழக்கு சம்பந்தமாக சிவகங்கை நகர் காவல் ஆய்வாளர் அழைத்ததின் பேரில் மாலை சுமார் 05.00 மணியளவில் தொண்டி ரோட்டில் வடக்கு பக்கம் முந்திரி காட்டில் சென்று அங்கு கிடந்த பிரேதத்தை புகைப்படம் எடுத்தேன். பின்னர் இறந்து போன நபர் பற்றி விசாரித்தேன். இன்ஸ்பெக்டர் அவர் மதுரை செல்லூரைச் சேர்ந்த ஜெயராமன் மகன் காளிதாஸ் என்று என்னிடம் சொன்னார். புகைப்படம் எடுத்த கேமராவை அப்படியே ஆய்வாளரிடம் ஒப்படைத்துவிட்டேன். புகைப்படத்தை ஆஜர்படுத்த அரசு தரப்பிற்கு உத்தரவிடப்படுகிறது. குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 9/2021**

**வழக்கு சாட்சி: PW.12**

**தேதி: 04.10.2024**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | **செல்லப்பாண்டி** | **ஜாதி:** |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்சமயம் காளையார்கோவில் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 28.02.2019ம் தேதி சிவகங்கை நகர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றினேன். மேற்படி காவல்நிலையக் குற்ற எண்.101/2019 வழக்கு தொடர்பாக துரித முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் படி கூறி சார்பு ஆய்வாளர் சக்திவேல் அதனை என்னிடம் ஒப்படைத்தார். அதனை பெற்று சிவகங்கை நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்ற பொறுப்பு வகித்த நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களிடம் அன்றே அதனை ஒப்படைத்துவிட்டேன். பின்னர் நிலையம் வந்து இது குறித்து அறிக்கை தாக்கல் செய்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை.**

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.9/2021**

**வழக்கு சாட்சி: PW.13**

**தேதி: 04.10.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | ரமா | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** | மருத்துவர் |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது:** | |

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்சமயம் சென்னை மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத் துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். 01.03.2019ம் தேதி சிவகங்கை மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றினேன். அன்று சிவகங்கை நகர் காவல் நிலையத்திலிருந்து குற்ற எண்.101/2019 வழக்கு சம்பந்தமாக இறந்து போன காளிதாஸ் என்பவரது இறப்பு சம்பந்தமாக பிரேத பரிசோதனை செய்ய மேற்படி காவல் நிலைய காவலர் முத்தையா மூலமாக வேண்டுகோள் கடிதம் பெற்றேன். மேற்படி முத்தையா இறந்து போன